**நீர் வளங்கள் சபை - 2022**

------------------------------------------------------

## .1 நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர் வளங்கள் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின், 1964 இன் 29 ஆம் இலக்க நீர்வளங்கள் சபை சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, சபையின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்தும் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நொகடெலலை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஒழுங்குபடுத்தும் சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர் வளச் சபை 1978 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்பட்ட கொழும்பு 07, ஹெக்டர் கொப்கேடுவ மாவத்தையில் உள்ள காணிக்காக 2013 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் ரூபா 12,772,000 வாடகைத் தொகை செலுத்தி வருடாந்த வாடகை அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளுமாறு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரின் | 1978 ஆம் ஆண்டு முதல் நீர்வள சபையின் தலைமை அலுவலகம் நடாத்தப்பட்டு வரும் ஹெக்டர் கொப்பகடுவ மாவத்தையில் உள்ள காணியை நீண்டகால குத்தகை அடிப்படையில் சுவீகரிக்குமாறு சபை கோரியிருந்த போதிலும், ரூபா 12,772,000 வருட குத்தகை தொகைக்கு குறுகிய கால குத்தகை அடிப்படையில் வழங்க முடியும் என திம்பிரிகசாய பிரதேச செயலகம் | தங்களின் பங்கு மற்றும் பொறுப்பை உரிய முறையில் பரிசீலிக்காமல், முறையான அதிகாரம் இல்லாமல், தலைமை அலுவலக வளாகத்தை காலி செய்ய தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழு எடுத்த முடிவு குறித்து நிதி அமைச்சரிடம் தெரிவித்து, தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். 2013 இல் இருந்து செலுத்தப்படாத குத்தகையை செலுத்தப்பட |

அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தால் 2019 ஆம் ஆண்டின் போது கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. பின்னர், காணி உரித்து தொடர்பான பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு திம்பிரிகசாய பிரதேச செயலாளருக்கு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்திருந்த நிலையில், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களை பின்பற்றாது சுமார் 45 வருட காலமாக சபையயின் தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட வளாகத்திலிருந்து நீங்கி 2021 ஜூலை 18 முதல் நாவல கொஸ்வத்த பிரதேசத்தில் உள்ள தனியார் வாடகை கட்டிடத்திற்கு தலைமை அலுவலகம் மாற்றப்பட்டது. எவ்வாறாயினும், இது தொடர்பான வழக்கு பிரதேச செயலாளரால் இறுதி செய்யப்படாமலோ அல்லது நீக்கப்படாமலோ இருப்பதால், அது தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் 100 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தெரிவித்துள்ளது. அதற்கு நீர் வளச் சபை இணங்கியிருக்கவில்லை என்பதுடன், குத்தகை உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை. குத்தகை தொகையை செலுத்தாமை காரணமாக குறித்த காணியிலிருந்து அகற்றுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் வெளியேற்ற உத்தரவு வழங்கப்பட்டது. மெகா பொலிஸ் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபை காணி ஆணையாளர் நாயகத்திடம் இருந்து சுவீகரித்த பின்னர் சபைக்கு பத்தரமுல்லையில் 40 பேர்ச்சஸ் காணி வழங்கப்பட்டது. ஆனால், பிரதமரின் செயலாளரின் அறிவிப்பின் பேரில், குறித்த காணியானது பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு கையகப்படுத்தப்பட்டதுடன், மாதாந்த கட்டிட வாடகைக்கு திறைசேரியால் நிதி வழங்கப்படுவதால், நிலத்தை காலி செய்து தலைமை அலுவலகத்தை வேறு கட்டிடத்திற்கு மாற்றும்படி சபைக்கு தெரிவிக்கப்பட்டது. இதன்படி, திம்பிரிகசாய பிரதேச செயலகம் இது தொடர்பான வழக்கை தொடராத காரணத்தினால் பொறுப்பொன்று காணப்படாமையால் அதற்கான நிதி ஒதுக்கீடு தேவையில்லை. மேலும், சபையால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் கணக்கு

வேண்டியிருக்கும் என்பதால் அந்த அளவிலான நிகழத்தக்க பொறுப்பொன்று காணப்படுகின்றது. இது சம்பந்தமாக, லங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின்படி நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கையின் குறிப்பு இலக்கம் 15 இன் மூலம் இந்த விடயம் தொடர்பில் நியம இலக்கம் 08 இற்கு உரிய தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு ரூபா 217,242,201 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள், ஆய்வு கூட உபகரணங்கள் மற்றும் கணினி ஆகிய சொத்துக்கள் 3 சொத்து தொகுதிகளுக்கு உரிய 537 சொத்து உருப்படிகளின் பயன்படு ஆயுட்காலம் நிறைவடைந்தமையால் அவற்றின் புத்தகப் பெறுமதி பூஜ்ஜியமாக காணப்பட்டதுடன் அந்த சொத்துக்கள் தொடர்பில் இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாத காரணத்தால் அவை மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றுக்கு பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது திருத்தப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், பெறுமதி பூச்சியமாகும் சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கும் பெறுமானத் தேய்விடுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் குழாய் கிணறு நிர்மாணிக்கும் வெளிவாரி நிறுவனம் மற்றும் அவற்றின் நில துளையிடல் இயந்திரம் மற்றும் நிலத்தடி நீர் நிபுணர்களை பதிவு செய்தல் 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கு மேலதிகமாக மீயாய்வாண்டின் போது ரூபா 3,218,000 மற்றும் ரூபா 329,000 தொகையான வருமானம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | மேற்குறிப்பிடப்பட்டவாறு சபை நிலத்தடி நீர் நிபுணர்களை பதிவு செய்திருந்த போதிலும் அதற்கு சபைக்கு எந்த ஒரு சட்ட ஏற்பாடும் கிடைத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பந்தி 14 க்கு முரணாக, பதிவு மற்றும் பதிவு புதுப்பித்தல் ஆகியவற்றின் வருமானம் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் நியமத்தின் 39(அ) பந்தியின் பிரகாரம், இந்த வருவாய்களை அங்கீகரிக்கப் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கை நிதி அறிக்கைகளில் வெளியிடப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது திருத்தப்படும். | வருமானங்களை அட்டுறு அடிப்படையில் இனங்காணுவதற்கும், நியமத்தின் 39(அ) பந்தியின் பிரகாரம், இந்த வருவாய்களை அங்கீகரிக்கப் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கை நிதி அறிக்கைகளில் வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கடந்த வருடங்களில் செயல்பாட்டு வருமானத்திற்கான ஒப்பீட்டுப் பெறுமதியானது ரூபா 6,896,000 உடன் சீராக்கப்பட்டு மீள பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன்,அது தொடர்பில் இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 3 இன் 54 ஆம் பந்தியின் (அ) முதல் (ஈ) வரை தகவல்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில் | 2021 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டிலேயே செலுத்தப்பட்டதால் இந்தச் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டு முதல் கணக்குகளை அட்டுறு அடிப்படையில் தயாரிக்கும் போது இந்த சிக்கல்களைத் தவிர்க்க முடியும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், மீள் பிரசுரிக்கப்பட்ட பெறுமதிக்காக வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | லை. | | |
| (உ) | நீர்ப்பாசன அமைச்சின் செலவின விடயத்திற்குரிய இலக்கம் 198-2-03-23-2507-17 இன் கீழ் 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 20,629,921 யூரோக்கள் அல்லது ரூபா 5,521,329,000 கிரயம் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தடி நீர் தகவல் வலையமைப்பினை தாபிக்கும் செயற்திட்டம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கு உரியதாக ஒப்பந்ததாரரால் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள், வாகனங்கள், உதிரி பாகங்கள், பொறிகள் மற்றும் மூலப்பொருட்களில் ரூபா 1,581,619,000 பெறுமதியான தளபாட உபகரணங்கள், இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் கணினி போன்ற நடைமுறை அல்லாத சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்ட பணிப்பாளரினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களை கணக்கு வைத்தல் தொடர்பிலான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், மேற்படி நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் போது திருத்துகின்றேன். | பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகள் தொடர்புடைய ஆண்டில் வருமானமாக கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிற்போடப்பட்ட வருமானம் ஒன்றாக நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2017 முதல் 2022 வரை நீர்ப்பாசன அமைச்சின் கீழ் ரூபா.5,521,329,000 செலவில் செயல்படுத்தப்பட்ட, மேலே உள்ள பந்தி (உ) இன் கீழ் காட்டப்பட்டுள்ள நிலத்தடி நீர் கண்காணிப்பு தகவல் வலையமைப்பை நிறுவும் திட்டத்தின் கீழ் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களுக்கு மேலதிகமாக, செலவிடப்பட்டிருந்த ரூபா.3,939,710,000 செலவில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவினை பிரதிநிதித்துவப்படுத்தும், உயர் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொண்ட 190 கிணறுகள் உரிய பராமரிப்பு உபகரணங்களுடன் சபைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன், இந்த 190 கிணறுகளின் பெறுமதி சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் போது திருத்துகின்றேன். | குழாய் கிணறுகள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் அமைச்சினால் கையகப்படுத்தப்பட வேண்டும் மற்றும் அவற்றின் மதிப்பு நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 14 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்தப்பட்ட வேதனங்கள் மற்றும் ஏனைய படிகள் தொடர்பில் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், சபையில் பிரதம முகாமைத்துவர் பதவியின் அந்த தகவல்களை வெளிப்படுத்த அல்லது தொடர்புடைய தரப்பினருடன் | தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்தப்பட்ட படிகள் சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுகளில் குறிப்பு இலக்கம் 04 - 1 இன் கீழ் பணிப்பாளர் சபை கட்டணங்களாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மேல் அதிகமாக கணக்கிட்டு கொள்கைகள் இலக்கம் 09 இன் கீழ் இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 14 இன் பந்தி 34 இல் கூறப்பட்டுள்ளபடி, முக்கிய முகாமைத்துவ ஊழியர்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டுக்குரிய வருமானங்கள் இனங்காணப்பட்டு அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு பதிலாக செயற்பாட்டு வருமானங்களுக்கு உரியதாக கடந்த வருடங்களில் பெறுமதிகள் அதற்கடுத்த வருடத்தில் மீண்டும் வெளியிடப்பட்ட நட்டத்திற்கு சீராக்கப்பட்டு இருந்தது. அதற்கு அமைய 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையை ரூபா 12,593,000 மற்றும் ரூபா 23,910,000 தொகையான நட்டம் அதற்கடுத்த வருடங்களில் ரூபா 10,973,000 மற்றும் ரூபா 16,988,000 எனுமாறு 12.9 சதவீதத்தினாலும் 28.9 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் போது திருத்துகின்றேன். | வருமானம் மற்றும் செலவுகள் துல்லியமாக அங்கீகரிக்கப்பட்டு, அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டும் |
| (ஆ) | கடந்த வருடங்களில் திறைசேரி மற்றும் ஏனைய மானியங்களின் கீழ் கிடைத்திருந்த ரூபா 334,244,000 தொகையான சொத்துக்கள் 2021 டிசம்பர் 31 ஆம் தேதி பிற்போடப்பட்ட வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த பெறுமதிகள் கடந்த வருடங்களில் வருமானமாக | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் போது திருத்துகின்றேன். | மானிங்கள் கிடைத்த ஆண்டிற்கான வருமானமாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அல்லாது தொடர்ந்தும் பிற்போடப்பட்ட வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய மேற்படி சொத்துக்களுக்கு உரிய காலக்கழிவு ரூபா 119,050,000 காலக்கழிவு கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் போது திருத்துகின்றேன். | காலக்கழிவு வருமானம் மற்றும் பெறுமானத் தேய்வு செலவினம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான குழாய் கிணறு நிர்மாணிக்கும் சேவை முற்பணக் கணக்கில் ரூபா 15,919,957 ஆன மீதி ஒன்று காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 898,205 தொகைக்கு உரிய சேவைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுமதி வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைகள் பெறுவதில் தாமதம், தவறான கோப்புகள் போன்றவற்றின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 898,205 தொகை பற்றுச்சீட்டுக்கு உள்ளாக்க முடியாதிருந்தது. | ஆண்டுக்குரிய வருமானம் சரியாக அங்கீகரிக்கப்பட்டு, அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். குழாய் கிணறு நிர்மாண சேவை முற்பணக் கணக்கில் உள்ள நிலுவைத் தொகையை உடனடியாகத் தீர்க்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1964 இன் 29 ஆம் இலக்க நீர்வளச் சபை அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், அமைச்சரால் 2017 மார்ச் 16 ஆந் திகதிய 2010/23 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி பத்திரம் மூலம் வழங்கப்பட்ட கட்டளைகள் | | | | |
| (i) | கட்டளை இலக்கம் 02 | குழாய் கிணறுகளை நிர்மாணித்தலில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்ற சகல நிறுவனங்களும் நீர்வளச் சபையில் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 72 நிறுவனங்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தது. அவ்வாறே பதிவு செய்யாது இருக்கின்ற நிறுவனங்கள் என்ன என்பது தொடர்பாக இனங்காண்பதற்காக போதியளவான வேலைத்திட்டம் நிறுவனத்தால் எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், மேற்கண்ட உத்தரவின்படி, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் 03 மாதங்களுக்கு ஒருமுறை புதிதாக அமைக்கப்பட்ட அனைத்து குழாய்களின் தரவுகள் அடங்கிய அறிக்கையை சபைக்கு வழங்க வேண்டும், ஆனால் 72 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில், 3 நிறுவனங்கள் மட்டுமே மேற்கண்ட அறிக்கையை வழங்கியுள்ளன. | 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் நீர்வள சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து துளையிடும் நிறுவனங்களும் 2022 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்ய எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் 2022 ஆம் ஆண்டில், 72 வெளிப்புற துளையிடும் நிறுவனங்கள் மற்றும் துளையிடும் கருவிகள் பதிவு செய்யப்பட்டன. மீண்டும் அனைத்து துளையிடும் நிறுவனங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு பதிவை புதுப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. | பதிவு செய்யப்படாத நிறுவனங்களை கண்டறிந்து பதிவு செய்ய வேண்டும். குழாய் கிணறுகளின் தரவு அறிக்கையை வழங்காத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | கட்டளை இலக்கம் 03 | நீர் போத்தலில் இடல் கைத்தொழில் மற்றும் குடிபான உற்பத்திகளில் ஈடுபடுகின்ற அமைப்புக்கள் அல்லது நிறுவனம் நபர்கள் இயற்கை நீர் ஊற்றுக்கள் அல்லது நிலக்கீழ் நீரை தமது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக | நீர் போத்தலில் இடல் கைத்தொழில் மற்றும் குடிபான உற்பத்திகளில் ஈடுபடுகின்ற 31 நிறுவனங்கள் மட்டுமே இதுவரை அந்தந்த நீர் மூலத்தின் தரம் குறித்த அறிக்கைகளை | குறித்த அறிக்கைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும், அறிக்கைகளை வழங்காத |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயன்படுத்துவதாயின் அந்த நீர் மூலத்தின் நீரின் தெரிவொன்று ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடமொன்றில் பரீட்சிக்கப்பட்டு உரிய பகுப்பாய்வு அறிக்கை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 40 நிறுவனங்கள் சபையில் பதிவு செய்திருந்த போதிலும் மேற்படி அறிக்கையை ஒரு நிறுவனம் மாத்திரமே வழங்கியிருந்தது. | சபையிடம் வழங்கியுள்ளன. 2022 ஆம் ஆண்டில், ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே தொடர்புடைய அறிக்கைகளை வழங்கியுள்ளது. எனவே, பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் உரிய தகவல்களை அளிக்குமாறு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்காத நிறுவனங்களுக்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iii) கட்டளை இலக்கம் 06 | இயற்கை நீர் ஆதாரங்கள் அல்லது ஆழமான அல்லது ஆழமற்ற நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் பொது அல்லது அரசு சாரா அமைப்புகள் பின்பற்ற வேண்டிய விதிகளை உள்ளடக்கிய 1 முதல் 5 வரையிலான உத்தரவுகளின்படி, செயல்படாத நிறுவனங்கள் அல்லது தனிநபர்களுக்கு எதிராக, 1999 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நீர்வளச் சபை சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | வணிக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீர் ஆதாரங்களின் நீரின் தரம் குறித்த அறிக்கைகளை சபைக்கு வழங்காத அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | கட்டளையின் பிரகாரம் செயல்படாத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1981 இன் 26 ஆம் இலக்க ஊழியர் சேம நிதி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 10 மற்றும் 11 | நிதியத்திற்கான தொழில்தருநர் பங்களிப்பு 12 சதவிகிதம் மற்றும் பணியாளர் பங்களிப்பு 8 சதவிகிதம் ஆக | நீர் வளச் சபையினால் 1981 ஜுலை மாதம் முதல் இதுவரையிலும் ஊழிய சேம நிதியத்திற்கு ஊழியர் | 1981 இன் 26 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பிரிவுகள் | காணப்பட வேண்டியதுடன், அதனை விட அதிக விகிதத்தில் ஒப்புக்கொள்ளப்படலாம். இருந்தபோதிலும், சபையின் தொழில்தருநர் பங்களிப்பு 12 சதவீதமாக இருந்த நிலையில், ஊழியர்களிடம் இருந்து 10 சதவீதம் அறவிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும், இது குறித்து ஆணையருக்கு தெரிவிக்கப்படவில்லை. | பங்களிப்பு 10 சதவீதம் மற்றும் சபையின் பங்களிப்பு 12 சதவீதம் என பங்களிப்பு பணத்தை செலவு வைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. ஊழிய பங்களிப்பு 10 சதவீதமாக காணப்படுகின்றமை ஊழியருக்கான சேமிப்பொன்றானமையால் இதுவரையிலும் ஊழியர்களின் எதிர்ப்பு தெரிவிக்கப்படவில்லை. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களை விட அதிக விகிதத்தில் பங்களிப்பு பணம் செலுத்துவதற்கு தொழில் தருநர் மற்றும் ஊழியர் ஆகிய இரு தரப்பினரினதும் எழுத்து மூலம் இனக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு ஆணையாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பொது முயற்சிகளில் கூட்டிணைந்த நிர்வாகத்திற்கான வழிகாட்டி கோவையில் வழிகாட்டல் | | | |
| | (i) 2.2.1 | சபைக்காக பிரதான செயலாற்றல் குறிகாட்டி நிர்ணயிக்கப்பட்டு அல்லது திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் சபையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | வழிகாட்டியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டுஈ அதன் பிரகாரம் சபையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 2.2.2 (ஆ) | பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு முன்னர் பணிப்பாளர் சபை பத்திரம் வாசிக்கப்பட்டு | இதற்கென விசேட அறிவும் அனுபவமும் கொண்ட உத்தியோகத்தர்களை | வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆராய்வதற்கு சபையின் அங்கத்தவர்களுக்கு சமர்ப்பித்தல், தீர்மானம் எடுப்பதற்கு மற்றும் பொறுப்பு உறுதிப்படுத்துவதற்கு உரிய நம்பகத் தன்மையான முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு ஒன்றினை பேணுதல், கணக்காய்வு குழு உள்ளடங்களாக ஏனைய உப குழுக்களின் தீர்மானங்களை கால அடிப்படையில் பின் தொடர்ந்து உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படும் நிதி மற்றும் நிதி அல்லாத உச்ச தகவல்களின் பயன்பாட்டிற்கு சாதகமான வகையில் சபையில் வலைத்தளத்தின் மூலம் வெளிப்படுத்துதல் எனும் தேவையை நிறைவேற்றுவதற்கு உரிய வகையில் வலுவான நிர்வாக சட்டகம் ஒன்றினை உருவாக்குவதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நியமிப்பது அவசியமான போதிலும் செயலாளரிடமும் பதவிகளை உருவாக்குமாறு கோரப்பட்ட போதிலும் அது அங்கீகரிக்கப்படாத நிலையில் தற்போது முகாமைத்துவ உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். | அளவுகோல்களின்படி சபையின் செயல்பாடுகள் நடத்தப்படுவதையும், வலுவான நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுவதையும் பணிப்பாளர் குழு உறுதிசெய்ய வேண்டும். |
| (iii) | 2.2.3 | இடர் முகாமைத்துவம் மற்றும் சபையின் உள்ளக நிர்வாக கட்டமைப்புகளின் போதியதன்மை மற்றும் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் பணிப்பாளர் சபையின் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக நிர்வாக கட்டமைப்புகளை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்த சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 2.4 | பணிப்பாளர் சபையுடனான உறவுகள் தொடர்பாக சபையின் | இது 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் | பணிப்பாளர் சபையிடமிருந்து அறிக்கைகளைப் |

| | | |
|---|---|---|
| செயலாளருக்கு வருடாந்த அறிக்கையொன்றை வழங்கவில்லை மற்றும் சபையின் ஆண்டறிக்கையில் ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பிலும் பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | இடம்பெறும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | பெற்று, வருடாந்த அறிக்கையில் பணிப்பாளர்கள் பற்றிய தகவல்களைச் சேர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 27,506,000 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,988,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,518,000 தொகையான பற்றாக்குறையிலான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 33,084,000 இனால் அதிகரித்திருந்த போதிலும், சம்பளம் மற்றும் படிகள் ரூபா 24,453,000 இனால் மற்றும் வழங்கல் செலவினம் ரூபா 21,513,000 இனால் அதிகரித்தமை இந்த பற்றாக்குறை அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வடமத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி திட்டங்களின் கீழ் குருலுனிகாவெவ மற்றும் மனேருவா ஆகிய புடவைக் கைத்தொழில் நிலையங்களில் 2 குழாய் கிணறுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 467,500 தொகையானது 2021 ஆம் ஆண்டு சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆண்டினுள் குழாய் கிணறு நிர்மாணிக்கப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் அந்த குழாய் கிணறை நிர்மாணிக்கும்போது மேற்படி செலுத்திய தொகையை விஞ்சி ரூபா | இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | உரிய திகதியில் குழாய் கிணறு அமைக்காததால் ஏற்பட்ட இழப்பை வசூலிக்க, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

280,219 செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது. இது தொடர்பில் குறித்த பரிவர்த்தனையாளரின் முறைப்பாட்டி அடிப்படையில் பாவனையாளர் சேவை அதிகார சபையால் பழைய மதிப்பீட்டில் குறித்த குழாய் கிணறுகள் நிர்மாணித்து வழங்கப்பட வேண்டும் என வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் குறித்த குழாய் கிணறுகள் மேலதிக கட்டணங்களை அறவிடாது நிறைவு செய்யப்பட்டிருந்தது. இதன் போது சேவை உடன்படிக்கையின் பிரகாரம் உரிய திகதியில் குழாய் கிணறுகளை நிர்மாணிக்காத காரணத்தால் மேற்கொள்வதற்கு நேர்ந்த மேலதிக கிரயமான ரூபா 280,219 தொகையை பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும் என 2022 டிசம்பர் 25 ஆம் திகதிய 1430 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணத்தை அறவிடுவதற்கும் அதற்கு பொறுப்பு கூற வேண்டிய உதவி நில விதிப்பு உத்தியோகத்திற்கு எதிராக ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | நீர்வளச் சபை அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு உரிய வரைபு தயாரிப்பதற்கு தனியார் வழக்கறிஞர் மற்றும் சட்டத்தரணிகள் கம்பனி ஒன்றின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்காய்வு திகதியான 2023 ஜுலை 31 ஆன் திகதி வரையிலும் ரூபா 620,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் அதிகார சட்டம் திருத்தப்பட வேண்டும் என இனங்காணப்பட்டு 4 வருடங்கள் கடந்திருந்த பின்னரும் அந்த பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை . | 2017 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சட்ட வரைபு தொடர்ந்தும் மேம்படுத்தப்பட்டு 2022 இல் ஏற்பட்ட ஏனைய போக்குகளையும் கருத்திற் கொண்டு புதிய சட்டத்தரணிகள் கம்பனியொன்றின் மூலம் திருத்தங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. வரைபு தயாரிக்கப்பட்டு கௌரவ அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது ஏற்பட்ட திருத்தங்களை மேற்கொண்டு மீண்டும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. | அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்யும் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் மேற்கொள்ளப்பட்ட நில விதிப்பு நடவடிக்கைகள், நீர் கொள்ளளவு பரிசோதனைகள் மற்றும் பொதுவான வாகன ஓட்டங்களில் ஏற்படும் அதிகளவான எரிபொருள் பயன்பாட்டில் மூலம் ஏற்படும் மோசடிகளை தவிர்ப்பதற்கு உரிய நடைமுறை ஒன்றாக குறித்த இயந்திரங்களினதும் வாகனங்களினதும் சென்சார் உபகரணங்கள் மற்றும் ஜீ.பீ.எஸ் கட்டமைப்பு ஆகியவற்றை பொருத்துவதற்கு 2019 செப்டம்பர் 18 ஆம் திகதி தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் போது இந்த 7 நில விதிப்பு இயந்திரங்கள், 2 நீர் பம்பி கட்டமைப்புகள், 1 க்ரூ கெப், 12 கெப் வண்டிகள் மற்றும் 8 கம்ப்ரசர் உபகரணங்களை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 3 1/2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த | துளையிடும் இயந்திரங்கள், காற்றமுத்த இயந்திரங்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் வண்டிகள் போன்றவற்றுக்கான 30 ஜிபிஎஸ் சாதனங்கள் நிறுவும் பணிகள் நிறைவடைந்தன, மேலும் டாக்சிகள் தவிர மற்ற இயந்திரங்களுக்கு எரிபொருளைப் பயன்படுத்துவதால் கணக்கீட்டில் சிரமம் ஏற்பட்டதுடன் பின்னர் அளக்கும் கருவிகள் வழங்கப்பட்டு அந்த பிரச்சினை தீர்க்கப்பட்டது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, களத்திற்கு இயந்திரங்களை அனுப்புவது மட்டுப்படுத்தப்பட்டது மற்றும் இயந்திரங்களில் தொழில்நுட்ப குறைபாடுகள் காரணமாக, தகவல் அறிக்கைகள் புதுப்பிக்கப்படவில்லை. களத்தில் இயங்கும் அலகுகளின் பதிவேடுகளை சரிபார்த்த பின், அவர்களுக்கு மட்டும் பணம் | எரிபொருள் சென்சார் உபகரணங்கள் மற்றும் ஜி.பி.எஸ். கட்டமைப்பை நிறுவுதல் உடனடியாக நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்னரும் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 21 ஆம் திகதி வரையிலும் இந்த கட்டமைப்பில் 12 கெப் வாகனங்கள் மற்றும் 3 விதிப்பு இயந்திரங்கள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்தன. | செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 40 பேர்ச்சஸ் காணியை 30 வருட காலத்திற்கு நீர்வள சபைக்கு வழங்குவதற்கு 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய அமப/16/2500/724/099 ஆம் இலக்கமுடைய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. சபையின் புதிய தலைமை அலுவலகக் கட்டடம் கட்ட முன்மொழியப்பட்ட மேற்படி நிலத்துக்கு, அரசு தலைமை மதிப்பீட்டாளர் ஆண்டுக்கு ரூபா 2,700,000 குத்தகையை நிர்ணயித்திருந்தார். 2016 ஆம் ஆண்டு முதல் 2023 மார்ச் வரையில் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் ரூபா 23,344,253 தொகையை வாடகையாக சபை் செலுத்தியுள்ளது. இந்த நிலத்தில் பிரதான அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு, 2018 ஆம் ஆண்டு முதல் நிலத்தடி நீர் கண்காணிப்பு தகவல் வலையமைப்பை நிறுவுவதற்கான முன்னோடி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது, ஆனால் முறையான குத்தகை ஒப்பந்தம் இல்லாததால் அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை . | பத்தரமுல்லையில் ஹெக்டர் கொப்பகடுவ மாவத்தையில் உள்ள காணியை விடுவிக்குமாறு வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய் 40 பேர்ச் காணியை சபைக்கு வழங்க நகர அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது. இந்த காணி 2015 ஆம் ஆண்டு சபைக்கு வழங்கப்பட்டது, அதன் பின்னர் இந்த காணியில் நெதர்லாந்து திட்டத்தின் கீழ் கட்டிடத்தை நிர்மாணிக்க அப்போதைய தலைவர்கள் பணியாற்றினர், ஆனால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிலம் பௌதீக உடைமையாக மட்டுமே வழங்கப்பட்டது. நிலம் சபைக்குச் சொந்தமானது எனக் கூறி, பணம் வசூல் செய்யப்பட்டாலும், நிலச் சட்டம் பிரிவு 6(1) இன்படி நிலம் விடுவிக்கப்படாததால், குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது, காணிகள் ஆணையாளர் குறித்த ஒப்புதலை வழங்க உள்ளார். குத்தகை ஒப்பந்தம் இல்லாததால் கட்டடம் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது, இந்த காணி ஒரு வருட காலத்திற்கு மாதாந்த இடைக்கால குத்தகையாக ரூபா 500,000 தொகைக்கு வெளிநாட்டு சேவைகள் பணியகத்திற்கு வழங்குவதற்கு இணக்கம் | குத்தகை ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன் பணத்தைச் செலுத்தியதால் மற்றும் அந்தச் செலவில் இருந்து எந்தப் பலனும் கிடைக்காமையால், செலவிடப்பட்டுள்ள நட்டத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகர்தரகளுக்கு எதிராக தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் II இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காணப்பட்டுள்ளது.

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் துளையிடும் பிரிவுக்கு ஒரு துளையிடும் முகாமையாளர் மற்றும் 11 துளையிடும் அலுவலர்கள் உட்பட 68 பேர் கொண்ட உதவிப் பதவியணியொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ஊதியம், மேலதிக நேர படிகள், பயணச் செலவுகள் மற்றும் பிற செலவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பணியாளர்களுக்கு ரூபா 41,478,196 ஆன கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த பிரிவிற்குச் சொந்தமான 16 துளையிடும் இயந்திரங்களில், 8 மட்டுமே இயங்கும் நிலையில் இருந்ததோடு, 2016 ஆம் ஆண்டில் 437 குழாய் கிணறுகளை இப்பிரிவு நிர்மாணித்திருந்தது, ஆனால் மீளாய்வாண்டின் போது அது தொடர்ந்து 79 கிணறுகளாகக் குறைந்துள்ளது. திணைக்களத்தின் செயற்பாட்டுத் திறனின்மை, சபையால் நிர்மாணிக்கப்பட்ட கிணறுகளின் தரம் மற்றும் திறன் தொடர்பாக சமூகத்தில் அதன் நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கம் ஆகியன அதற்கு காரணமாக அமைந்திருந்தன. ஆனால் அது பற்றிய பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு தேவையான திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படடிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் ரூபா 20,647,630 மதிப்பில் 79 குழாய் கிணறுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டு கொவிட் தொற்றுநோயின் தாக்கம் மற்றும் எரிபொருளைப் பெறுவதில் உள்ள சிரமங்கள் மற்றும் எரிபொருள் விலையில் ஏற்பட்ட விரைவான மாற்றம் காரணமாக, குழாய் கிணறுகள் அமைக்கும் பணி தடைபட்டது. | துளையிடும் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட வளங்களை அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்தவும், தரமான மற்றும் திறமையான சேவைகளை வழங்க தேவையான திருத்த நடவடிக்கைகளை எடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில், குழாய் கிணறு அமைக்கும் சேவை முன்பணக் கணக்கில் ரூபா 15,919,957 ஆன | பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,310,356 தொகையை பணம் செலுத்தும் தரப்பினரின் ஒத்துழைப்பின்மை, அதிக | சபையினால் பொறுப்பேற்றுள்ள பணியை உரிய காலத்தில் |

| | | |
|---|---|---|
| மீதியொன்று காணப்பட்டது. அதில், ஓராண்டுக்கு மேல் பழைமையான தொடர்புடைய பணிகள் முடிக்கப்படாமல் ரூபா 1,637,828 முற்பணமாக இருந்தது. உரிய சேவைகள் வழங்கப்படாமையால், முன்பணமாக ரூபா 2,310,356 ொதகையை சபை திருப்பிச் செலுத்தியிருந்ததுடன், அதில் 4 கிணறுகள் அமைக்கும் பணி தோல்வியடைந்ததால் செலுத்த நேர்ந்த ரூபா 883,055 தொகையும் காணப்பட்டது. | பணம் செலுத்துதல், பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் பாரவுலோக பரிசோதிப்பு உபகரணங்கள் செயலிழந்தமை ஆகிய காரணங்களால் திருப்பி செலுத்த நேர்ந்திருந்தது. மேற்குறிப்பிட்ட தொகையில் ரூபா 409,709 தொகையை அறவிட்டுசேவை முன்பணக் கணக்கை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதித் தொகையான ரூபா 1,900,646 தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>தோல்வியடைந்த 4 ஆழ்துளை கிணறுகள் அமைத்ததால் சபைக்கு செலவிட நேர்ந்த தொகை ரூபா 883,055 ஆன போதிலும், 04 பழுதடைந்த குழாய் கிணறுகளை அமைப்பதற்காக சபைக்கு அறவிடப்பட்ட தொகை ரூபா 1,407,415 ஆகும். அதன்படி, சபை ரூபா 524,360 தொகையான இலாபத்தினை ஈட்டியுள்ளது. | நிறைவேற்ற வேண்டும். ஆழ்குழாய் கிணறுகளை வெற்றிகரமாக அமைத்ததற்கு சபையே பொறுப்பேற்க வேண்டும் என்பதால், பழுதடைந்த குழாய் கிணறுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கையில் நிலத்தடி நீரின் அளவு மற்றும் தரமான நிலைமைகளை நிர்வகிப்பதற்கான ஒரு அமைப்பை நிறுவுதல், சிறுநீரக நோய் அதிகமாக காணப்படும் அனுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை மற்றும் புத்தளம் ஆகிய 4 மாவட்டங்களில் இலங்கைக்கான நிலத்தடி நீர் கண்காணிப்பு வலையமைப்பை நிறுவுவதற்கான முன்னோடித் திட்டத்தை | | |

நடைமுறைப்படுத்துவதற்கு 2015 யூலை 29 ஆந் திகதிய அமப/15/1087/644/005 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் 20,629,921 யூரோக்களுக்கு மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்த நெதர்லாந்தின் ரோயல் ஐக்கல்கேம்ப் நிறுவனத்துடன் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் 03 ஆம் திகதி ஒப்பந்தம் செய்துகொண்டதுடன் இத்திட்டத்தின் பணிகள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவடைந்தன. இலங்கை அரசாங்கம் திட்டத்தின் 85 சதவீதமான 20,629,921.18 யூரோக்கள் அல்லது ரூபா 5,521,329,000 அதாவது 17,535,433 யூரோக்களை நெதர்லாந்தின் ராபோ வங்கியில் (Rabo Bank) இருந்து வருடாந்தம் 1.45 சதவீதத்திற்கு மானிய வட்டி விகிதத்தில் 10 வருடங்களில் சமமான 20 தவணைகளில் மீளச் செலுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தால் பெறப்பட்டிருந்தது. மிகுதி 15 சதவீத யூரோ 3,094,488.18 ஆன தொகை இலங்கை ஹட்டன் நேஷனல் வங்கியிடமிருந்து , 3 வருட சலுகைக் காலத்திற்குப் பிறகு 2025 இன் இரண்டாம் பாதியில் இருந்து 15 ஆண்டுகளுக்குள் செலுத்தப்படுவதற்கு இலங்கை அரசாங்கத்தால் பெறப்பட்டிருந்தது. திட்டங்கள் நிறைவடைந்துள்ள போதிலும், அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | நெதர்லாந்து ரெபோ வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன் தொகையில் ரூபா 76.2 | செயற்திட்டக் கடன் பணம் மற்றும் கடன் தவணை செலுத்துதல் ஆகியவை | செலவழிக்கப்படாத பணத்தை கடன் தவணைகளை கழித்து |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் அல்லது 433,288 யூரோக்கள் தொடர்பான பணிகள் நெதர்லாந்து ஒப்பந்தக்காரரால் நிஜறைவு செய்யப்படவில்லை என்பதுடன், கடன் ஒப்பந்தத்தின் 5.2 வது பிரிவின்படி, முழு கடன் தொகையும் பயன்படுத்தப்படாவிட்டால், மீதமுள்ள தொகை கடன் திருப்பிச் செலுத்தும் தவணைகளில் இருந்து விகிதாச்சாரப்படி கழிக்க முடியும் எனினும், நிறைவு செய்யப்படாத பணிகள் தொடர்பில் சபையினால் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி மூலம் வெளிநாட்டு வளங்கள் செய்யப்படுகிறது, மேலும் இதுவரை இரண்டு கடன் தவணைகள் ரெபோ வங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளன. செயற்திட்ட ஒப்பந்தத்தின்படி தரவு மைய கட்டிடத்தை கட்ட இயலாமையால், ரெபோ வங்கியுடன் செய்து கொள்ளப்பட்ட கடன் ஒப்பந்தத்தின் 5.2 வது பிரிவின்படி, செலவழிக்கப்படாத தொகைக்கான மேலதிக பணிகள் வெளிநாட்டு வளத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும். அதன்படி, முழு கடன் தொகையும் பயன்படுத்தப்படாவிட்டால், மீதமுள்ள தொகை கடனை திருப்பிச் செலுத்தும் தவணைகளில் இருந்து விகிதாசாரப்படி கழிக்கப்பட்டுள்ளது. | செலுத்த திறைசேரிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்தின் கீழ், பத்தரமுல்லை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியில் தரவு நிலைய கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு ரூபா 259.1 மில்லியன் அல்லது 1,473,462 யூரோக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், நிச்சயற்ற ஒதுக்கீடான ரூபா 329.8 மில்லியன் அல்லது 1,875,447 யூரோக்களை அதற்கென பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது. அதன் மொத்த பெறுமதியில் 15 வீதமான ரூபா 544.2 மில்லியன் அல்லது 3,094,488 யூரோக்கள் நெதர்லாந்து ஒப்பந்தக்காரருக்கு முன்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணியின் உரிமை இல்லாத காரணத்தினால் தரவு மையம் | செயற்திட்ட ஒப்பந்தங்களின்படி, தரவு மையத்திற்காக நீர்வள சபை அலுவலகம் அமைந்துள்ள ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் 6,000 சதுர அடி பரப்பளவான கட்டிடம் கட்டப்பட வேண்டிய போதிலும், ஆனால் அந்த நிலம் நகர அபிவிருத்தி அதிகார சபையால் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் தலைமை அலுவலகம் உள்ளடங்கலாக தரவு மையமானது 24,000 சதுர அடி பரப்பளவில் அமைக்க நீர்வள சபையால் திட்டமிட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட பத்தரமுல்லைக் காணிக்கான குத்தகை ஒப்பந்தம் வழங்கப்படாததன் | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன், கட்டடம் கட்ட தேவையான அடிப்படை பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும், எனினும் அதற்கமைய செயற்படாது செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திய சபையின் உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டப்படவில்லை. இந்த தரவு மைய கட்டிடம் கட்டப்படாததால், திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் மற்றும் எதிர்பார்த்த பலன்களை உரிய முறையில் அடைய முடியவில்லை. | காரணமாக இந்தக் கட்டிடத்தை நிர்மாணிக்க முடியாவிட்டாலும், இரத்மலானை பணிமனை அலுவலகத்தின் (Workshop) தரவு மையம் தற்போது நிறுவப்பட்டு செயற்திட்ட நோக்கங்கள் மற்றும் தேவைகளுக்காக இயங்கி வருகின்றது. | |
| (iii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், 05 வருடங்களுக்கு ஹைட்ரோமீட்டர் தரவு கட்டமைப்பை பராமரிப்பதற்கு தேவையான உதிரிப்பாகங்களை ஒப்பந்ததாரர் வழங்க வேண்டியிருந்தது, இதற்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 106.5 மில்லியன் அல்லது 605,894 யூரோக்கள் செலுத்தப்பட்டுள்ளன. இதன் கீழ் ஒப்பந்ததாரர் 160 உதிரி பாகங்களை வழங்கியிருந்ததுடன், அவற்றில் இரத்மலானை களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த 41 பராமரிப்பு உபகரணங்களை முறைப்படி ஏற்றுக் கொள்ளாமல் கணக்கீடு செய்யவில்லை. | ஒப்பந்ததாரர் வழங்கிய அனைத்து பொருட்களும் பட்டியலிடப்பட்டு களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. BOQ உருப்படி 34 இன் கீழ் கட்டுமானப் பணிகளுக்காக நிறுவப்பட்ட உபகரணங்களை 5 ஆண்டுகளுக்குப் பராமரிப்பதற்கான கிரயமும் சேர்க்கப்பட்டுள்ளது. | அனைத்து தொடர்புடைய பொருட்களும் சபையால் அடையாளம் காணப்பட்டு முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு களஞ்சியப்படுத்தி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (iv) | அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மொனராகலை ஆகிய 03 மாவட்டங்களில் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதால் சிறுநீரக நோய் பரவலாகக் காணப்படும் பிரதேசங்களில் நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவுத் தரவுகளை தற்காலிகமாகப் பெற்றுக் கண்காணிப்பதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். அதன் போது சபையின் தலைமை அலுவலகத்தில் நிர்மாணிக்கப்படும் குறித்த தரவுகள் கால அடிப்படையில் அனுப்பப்பட வேண்டும். எவ்வாறாயினும், இன்று நாட்டில் குறிப்பிடத்தக்க | இத்திட்டத்தின் மூலம், அந்தந்த முன்னோடி பகுதிகளில் அதிக நிலத்தடி நீரை ஈர்க்கும் கிராமப்புற மற்றும் பெரிய நீர் வழங்கல் திட்டங்களின் நிலத்தடி நீர் ஆதாரங்கள், கடல் நீர் கலப்பதன் மூலம் உப்புத்தன்மை அதிகரிக்கும் பகுதிகள் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட்டன. அந்த நீர் ஆதாரங்களின் தரம் மற்றும் அளவு மாற்றங்கள் மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில், அந்த நீர் ஆதாரங்களின் முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டிற்காக நீர்வள | திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் வளங்களை சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த முடியும் என்பதால் அதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரச்சினையாக இருக்கும் நிலத்தடி நீரின் அளவு மற்றும் தரமான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க அந்தத் தரவை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த இந்தத் செயற்திட்ட முன்மொழிவு அல்லது இந்தத் தரவு அமைப்பைச் செயல்படுத்தும் பொறுப்பு சபையிடம் காணப்படவில்லை. அதன்படி, 2025 ஆம் ஆண்டு முதல் எந்தவொரு பொருளாதார நன்மைகளும் இன்றி இலங்கை அரசாங்கம் 20.06 மில்லியன் யூரோக் கடன் தொகையை தொடர்புடைய வட்டியுடன் செலுத்த வேண்டியிருந்தது. | சபையால் பல திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இதன் கீழ், தேசிய சமூக நீர் திணைக்களம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலத்தடி நீர் தொடர்பாக நடத்தப்படும் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளுக்கு இந்தத் தகவல்களைப் பயன்படுத்த சபையின் மூலம் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. | |
| (v) | செயற்திட்டத்தின் கீழ், 2,240,030,328 யூரோக்கள் அல்லது ரூபா 397.98 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 02 உயர்தொழில்நுட்ப துளையிடும் இயந்திரங்கள் (MS – FT drilling mountel truck) பயன்படுத்தப்பட்டதுடன், இந்த 02 இயந்திரங்களும் செயற்திட்டம் நிறைவடைந்த பின்னர் சபையிடம் கையளிக்கப்பட்டன. மேற்கூறிய இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் இயக்கம் தொடர்பான சிக்கல்கள் காரணமாக, கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் அவற்றை எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தாமல் சபை அவற்றைச் செயலற்ற நிலையில் வைத்திருந்தது. | 02 துளையிடும் இயந்திரங்களின் துளையிடும் பணி தொடர்பில் சபையின் நான்கு துளையிடும் உத்தியோகத்தர்கள் பணியமர்த்தப்பட்டு முழுநேர பயிற்சி பெற்றனர். ஒப்பந்ததாரரின் கீழ் ஈடுபட்டுள்ள துளையிடும் நிபுணர்களிடமிருந்து அவர்கள் பொருத்தமான திறனைப் பெற்றுள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டது. அதன்படி, இரண்டு இயந்திரங்களின் துளையிடும் பணியை வாரியத்தின் துளையிடும் அலுவலர்கள் செய்யலாம். இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் செயல்பாட்டின் அதிக செலவு காரணமாக இந்த இயந்திரங்களை பயன்படுத்த முடியாதிருந்தது. | இந்த உயர்தொழில்நுட்ப துளையிடும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |
| (vi) | நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கும் நெதர்லாந்தில் உள்ள ஒப்பந்ததாரருக்கும் இடையிலான | இந்த தரவு கட்டமைப்பை ஸ்ரீ லங்கா டெலிகொம் (SLT) மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் உள்ளூர் முகவரின் மூலமாகவோ | வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதிக உணர்திறன் வாய்ந்த தரவுகளை வரையறையின்றி |

உடன்படிக்கையின் பிரகாரம், தானியங்கி தரவு கணக்கெடுப்பு முறையை நிறுவுவதற்கு நிறுவனம் 05 வருடங்களுக்கு அனுசரணை (Hosting Website) வழங்க வேண்டியிருந்தது. அதன்படி, ஒப்பந்ததாரரின் நாட்டிலுள்ள ஒரு நிறுவனத்தால் தொடர்புடைய அனுசரணை வழங்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக உயர்தொழில்நுட்பப் பின்னணியில் செயற்படும் இத்திட்டத்தின் செயற்பாட்டுப் பணிகள் சபையின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இலங்கையில் இருந்து பெறப்படும் தரவுகளின் கட்டுப்பாடு நெதர்லாந்து நிறுவனங்களுக்குச் சொந்தமாகிவிடும் அச்சுறுத்தல் நிலவியது. மேலும், தொடர்புடைய தரவு அமைப்பின் அனுசரணையானது 2027 திசெம்பர் 30 ஆந் திகதி நிறைவடையும் என எழுத்துப்பூர்வ இணக்கப்பாடு காணப்பட்டிருந்த போதிலும், 5 ஆண்டுகளுக்குப் பிறகும் அனுசரணையை அதே நிறுவனத்திற்கு மாற்ற வேண்டிய அபாயம் நிலவியது.

செய்ய முடியுமா என்ற பிரச்சினை பேரம் பேசும் குழுவில் (CANC) முன்வைக்கப்பட்ட போதிலும், தொழில்நுட்ப கோளாறு அடிப்படையில் அது அவர்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சர்வர் மூலம் செய்யப்பட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்ட 2022 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் 2027 திசெம்பர் 30 ஆந் திகதி வரை 5 ஆண்டுகளுக்கு அனுசரணை உரித்தாவதுடன், அதன் எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்துடன் செய்யப்பட்டது. மேலும், முதல் 5 ஆண்டுகள் முடிவடைந்த பிறகு, அவர்களின் தொழில்நுட்ப உதவி (Technical Assistance) வழங்கப்படும் என்றும், மேம்படுத்தல் (Upgrade) தேவைப்பட்டால் மட்டுமே, அதற்கான செலவை ஏற்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்த இணைய போர்டல் Turkey செயற்திட்டத்தின் பின்னணியில் அவர்களால் திட்டமிடப்பட்டு நிறுவப்பட்டது மற்றும் அதன் செயல்பாட்டு நடைமுறை மற்றும் அம்சங்கள் செய்யப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் செய்யப்பட்டது. அதன்படி, நீர்வள சபையின் உத்தியோகத்தர்களால் நிறுவப்பட்ட தரவு மையத்தில் தற்போது தேவையான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அணுகுவதற்கு உள்ள சாத்தியப்பாடு மூலம் நிலத்தடி நீர் ஆதாரங்களில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் கட்டுப்படுத்த உரிய தீர்வுகள் பயன்படுத்தப்பட வேண்டும்.